# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>

அ.வ.எண். 12/2017

பெயர் – வேலுச்சாமி(பி.வா.சா.2)

நாள் – 24.04.2026

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>

நான் வழக்கு சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பாக அச்சொத்து கிரையம் முன்னோருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எவ்வாறு வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்றால் நீதிமன்றம் ஆணையின் மூலம் ஏலம் எடுத்து பாத்தியப்பட்டது. வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டு அதன் மூலம் ஏலம் எடுக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

தபசில் சொத்தும் ஏலம் எடுத்ததாக சொல்லப்படும் சொத்தும் வெவ்வேறு என்றால் சரியல்ல. தபசில் சொத்தானது ஏலம் எடுப்பதற்கு முன்பாகவே வாதிகளின் முன்னோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது கிரையபத்திரத்தில் காட்டப்படுள்ள EP.No.399/1939–ல் உள்ள சொத்தும் தபசில் சொத்தும் வெவ்வேறானது என்றும், தாவா வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்து ஏலம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.11 ஆன கிரைய முன்னோர்கள் தவறான மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்து வாதிகளின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை வில்லங்கத்திற்கு உட்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆன கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அ.வ.எண்.105/1935 வழக்கிற்கும் நிறைவேறுதல் மனுவிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

தவறான கருத்துக்களின் அடிப்படையில் வாதிகளின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை கிரையத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்தின் நான்குமால் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது (சாட்சி பின்னிட்டு ஞாபகமில்லை என்று கூறுகிறார்). எனது கிரைய முன்னோர்கள் நான்குமால் விபரம் தெரிந்திருந்தால் அதை பத்திரத்தில் சொல்லியிருப்பார்கள் என்றால் சொல்லியிருப்பார்கள்.

வா.சா.ஆ.11 ஆனது மோசடியானது என்பதால் தான் அதில் நான்குமால் விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனது அனுபவத்தில்

இல்லாததால் தான் அதனுடைய நான்குமால் விபரம் குறித்து என்னால் குறிப்பிட முடியவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்து எனது கிரைய முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்பதால் எனக்கும் இவ்வழக்கு சொத்தில் உரிமையில்லை என்றால் சரியல்ல.

எனவே வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. எனது கிரைய முன்னோர்கள் மோசடியாக ஆவணங்கள் உற்பத்தி செய்து அதன் அடிப்படையில் பெறப்பட்ட வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.